DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
--------
IN THE COURT OF PRINCIPAL DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUPPATHUR
CC.118/2016

Calender
Miscellaneous
Preliminary Register                                        Prosecution: PW-6
Sessions
Deposition of witness for

| | |
|---|---|
| Name: **மாணிக்கம்** | Father Name: **முருகப்பகோனார்** |
| Village:**ஆபத்தாரணப்பட்டி** | Husband Name: |
| Caste: | Taluk: |
| Religion: | Occupation: |
| | Age: 79/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the day of 20.08.2024

1-ம் எதிரி ஆஜர் . மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. அவருக்கு குவிமுச. 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**:

நான் ஆபாத்தாரணப்பட்டியில் குடியிருக்கிறேன். நான் சி.ஆர்.பி.எப் ல் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். அ.சா.1, 2 ஆகியோர்களைத் தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். மற்ற எதிரிகளை தெரியாது. 07.05.2016–ம் தேதி நான் மாலை 3.45 மணியளவில் நான் வயலில் மாடு மேய்த்து கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரியும் அவருடைய மனைவியும் அ.சா.1 விவசாயம் செய்த இடத்தில் தேங்காய் வெட்டினார்கள். ஏன் தேங்காய் வெட்டுகிறீர்கள் என்று அ.சா.2 கனிமொழி கேட்டவுடன் சண்டை ஏற்பட்டது. அப்போது 1–வது எதிரியின் மனைவி யசோதை மட்டையால் அ.சா.2ஐ அடித்தார். இருவரும் சத்தம் போட்டார்கள். நான் சண்டையை விலக்கிவிட்டேன். கனிமொழிக்கு காயம் இருந்ததா என்றால் இல்லை பெண் என்பதால் நான் அதைப் பற்றி தெரிந்துகொள்ளவில்லை. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNSV0A0003852016-orderno-2.pdf

www.ecourtsindia.com

**குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திற்கு அருகில் எனக்கு வயல் எதுவும் கிடையாது. சம்பவ இடத்திற்கு கிழக்கு திசையில் என்னுடைய வயல் உள்ளது. சம்பவ இடத்திற்கும் என்னுடைய வயலுக்கும் இடையே சுமார் 500 மீட்டர் தூரம் இருக்கும். நான் எங்கள் ஏரியாவிலும் மாடு மேய்ப்பேன் சம்பவதன்று வளநாடு வயலில் மாடு மேய்த்தேன். நான் பொதுவாக காலை 10, 11 மணிக்கு மாடு மேய்க்க சென்றுவிட்டு மதியம் 3, 4 மணியளவில் வீடு திரும்புவேன். அ.சா.1ற்கும் எதிரிகளுக்கும் சுமார் 10 வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் வளநாடு வயலில் மாடு மேய்த்து கொண்டிருந்தததை போலீஸ் விசாரணையில் கூறியிருக்கிறேன். அ.சா.1ன் வயலில் தென்னை மரங்கள் உள்ளது. அ.சா.1ன் வயலில் உள்ள தென்னை மரங்களிலிருந்து விழும் தென்னை மட்டைகளை அ.சா.1 எடுத்து செல்வார் என்றால் பொதுவாக எல்லோரும் எடுத்துச் செல்வார்கள். சம்பவ இடத்திற்கு அருகில் விவசாயம் செய்யப்படாத இடத்தில் முள் புதர்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். என்னை போலீசார் 1 முறை விசாரித்தார்கள். என்னிடம் கையொப்பம் வாங்கிக் கொண்டார்களா என்பது ஞாபகம் இல்லை. என்னிடம் 1 வாரத்திற்குள் விசாரித்தார்கள். சம்பவ இடத்திற்கு அருகே யார் யாருடைய நிலங்கள் உள்ளது என்பது சரியாக தெரியாது. நான் மாடு மேய்த்து கொண்டிருந்த இடத்திற்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 150 மீட்டர் தூரம் இருக்கும். நான் சத்தம் கேட்டுதான் சம்பவ இடத்திற்கு வந்தேன். அ.சா.1 எனக்கு பங்காளி முறையாகும். முதல் விசாரணையில் கூறியுள்ளபடி எவ்வித வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால்

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNSV0A0003852016-orderno-2.pdf

**சரியல்ல. சம்பவ இடத்தில் எதிரிகள் யாரும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.**

சாட்சி அரசு மற்றும் எதிரி தரப்பு மற்றும் வழக்குரைஞர்களுக்கு முன்னால் சொல்ல சொல்ல என்னால் தட்டடச்சருக்கு சொல்லப்பட்டு அலரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

K MUMTAJ Digitally signed by K MUMTAJ

முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், திருப்பத்தூர்.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNSV0A0003852016-orderno-2.pdf

www.ecourtsindia.com